1972 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி அனந்தநாயகி......

திரு. நா. வீராசாமி : இந்தியாவிலேயே...............

MR. SPEAKER : The Hon. Member is not Thirumathi Anandanayaki.

திருமதி த. ந. அனந்தநாயகி : மின்சாரம் விஸ்தரிக்கப்படுகிறது என்று எல்லா இடங்களுக்கும் தெரு விளக்குகளை நாம் போட்டு வருகிறோம். ஆனல் தெரு விளக்குகள் தான் பெரும்பாலான இடங்களில் எரிவதில்லை. ஆகவே விளக்குகள் ஒழுங்காக எல்லா இடங்களிலும் எரியும்படி பராமரிக்கப்படுவதற்கு அரசாங்கம் தீவிர கவனம் செலுத்துமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அவர்கள் ஆளும் கட்சியில் இருக்கிறபோதும் அழகாகப் பேசியிருக்கிறார்கள். அப்போதிருந்ததைவிட இப்போது குறைபாடுகள் குறைவுதான்.

திரு. நா. வீராசாமி : இந்தியாவில் தமிழ் நாட்டில் தான் உணவு உற்பத்தியை அதிக அளவில் பெருக்க நிறைய பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. நமக்கு மின்சார உற்பத்திச் செலவே யூனிட்டுக்கு 16 பைசாவாக இருக்கிறபோது நாம் விவசாயிகளுக்கு யூனிட் 12 பைசா என்று தான் கொடுக்கிறோம். இந்த நஷ்டத்தை யாவது மத்திய அரசாங்கம் ஈடு செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி, அந்தத் தொகையை மத்திய அரசாங்கத்திடம் இருந்து பெறுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அரசின் சார்பாக வேறுபல மானியங்கள் சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தப் பட்டு வருகின்றன. அவைகளே இன்னும் பலன் அளிக்கவில்லை. அவை கிடைத்த பின் இதுபற்றியும் யோசிக்கலாம்.

State Transport buses

* 638 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the State Transport buses which were going via. Perambalur to different places have been stopped due to the introduction of double decker buses;

(b) if so, whether the Government have made any alternative arrangement for the convenience of the travelling public of the Perambalur Town; and

(c) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்;

(இ) அண்டு (உ) கடுவிசைப் பேருந்து வழித்தடங்களில் விடப்பட்ட மாடிப் பேருந்துகளுக்குப் பதிலாகப் பின்னர் சாதாரணப் பேருந்துகள் விடப்பட்டன. திருச்சிராப்பள்ளி—சென்னை வழித்தடத்தில் (வழித்தட எண் 503) செல்லும் A.D பணிப் பேருந்துகள் பயணிகளின் வசதிக்காக 23—8—1971 முதல் பெரம்பலூர் வழியாகச் செல்கின்றன.

கோவில்களின் திருப்பணி

* 639 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971 மார்ச் முடிய நமது மாநிலத்தில் அரசு நிதி உதவியுடன் திருப்பணி செய்யப்பட்டு வரும் கோவில்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : 105 கோயில்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள சில கோயில்களில் சிலைகள் வைப்பது என்றால் இங்கே வைக்கக் கூடாது, அங்கே வைக்கக் கூடாது என்று மத்திய அரசாங்கம் தெரிவித்து வருகிறதே, தமிழகத்தில் உள்ள கோயில் திருப்பணிகளுக்கு மத்திய அரசாங்கம் மானியம் ஏதாவது வழங்கி வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தமிழகத்தில் அறநிலைய பாதுகாப்பு வாரியத்தின்கீழ் உள்ள கோயில்களுக்கு மத்திய அரசாங்கம் மானியம் எதுவும் வழங்குவதில்லை. தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் உள்ள கோயிலில் சிலை வைப்பது குறித்துத் தான் விவகாரம் வந்திருக்கிறது.